5th February 1959]

THE HON. SRI M. A. MANICKAVELU : ஏதோ சில இடங்களில் கனம் அங்கத்தினர் சொல்வதுபோல் இருக்கலாம். ஆனால் பெரும்பான்மையாக, தாங்கள் இருக்கும் இடங்களை விட்டு வேறு இடங்களுக்குப் போகும் மனப்பான்மை—தாங்கள் இருக்கும் இடங்கள் நெருக்கடியாக இருந்தால்கூட—அவர்களிடம் இல்லை.

Appointment to the Ministerial Service

* 26 Q.—SRI K. B. S. MANI (on behalf of SRI M. C. Muthukumaraswamy) : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

மினிஸ்டீரியல் ஸெர்விஸில் தாற்காலிக, நிரந்தர வேலைகளுக்கு அபேட்சகர்களைத் தேர்ந்தெடுக்கும் விஷயத்தில் வகுப்புவாரித் தேர்வு முறை இல்லா வேலை தேடித்தரும் ஸ்தாபனங்களால் பின்பற்றப்படுகிறதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : No Sir.

Preparation of medicines by Devasthanams

* 27 Q.—SRI K. B. S. MANI (on behalf of SRI M. C. Muthukumaraswamy) : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) அறநிலையப் பாதுகாப்புக்கு உட்பட்ட எத்தனை தேவஸ்தானங்களிலிருந்து ஆயுர்வேதிக் முறைப்படி உயர்ந்த மருந்துகள் தயாரித்து ஏழைகளுக்கு இனமாகக் கொடுக்க அனுமதி வேண்டுமென அரசாங்கத்திற்கு முறையீடு வந்துள்ளன ?

(ஆ) அவைகளில் எத்தனை தேவஸ்தானங்களுக்கு அனுமதி கொடுக்கப்பட்டுள்ளன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) None, Sir.

( ) Does not arise.

SRI K. B. S. MANI : தேவாலய தர்மகர்த்தாக்கள், இந்த மருந்துகள் என்னென்ன பலன்கள் எவ்வளவு எவ்வளவு அளிக்கின்றன என்று பரீட்சித்துப் பார்த்த பிறகு அவைகளை வெளியே அனுப்புகிறார்களா, அல்லது பரீட்சிக்காமலே மக்களுக்குக் கொடுத்து மக்களிடத்தில் அவைகளைப் பரீட்சிக்கிறார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஆயுர்வேத முறைப்படி மருந்து தயாரித்து மக்களுக்குக் கொடுக்க எத்தனை தேவஸ்தானங்கள் முன் வந்திருக்கின்றன என்று மூலக் கேள்வியில் கேட்கப்பட்டது. அதற்கு, "ஒரு தேவஸ்தானமும் முன் வரவில்லை" என்று நான் பதில் சொன்னேன்.

Polytechnics

* 28 Q.—SRI T. T. DANIEL : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) the total number of Polytechnics in the State, district-war;

(b) the total number of students studying in all the polytechnics; and

(c) the number of students studying in each polytechnic?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a), (b) & (c) A statement [a] is laid on the table of the House.

---

[a] Printed as Appendix III on pages 93 94 infra.

[5th February 1959

Sri T. T. DANIEL : Sir, because there has been a great rush to get admissions in these institutions, will the Government consider the desirability of starting some more polytechnics and is it a fact that some applications are pending in this regard before the Government?

The Hon. Sri C. SUBRAMANIAM : Government intend to start a few more polytechnics and in fact there are some applications pending.

Sri V. K. KOTHANDARAMAN : தென் ஆற்காடு, வட ஆற்காடு, கன்னியாகுமரி ஆகிய மூன்று ஜில்லாக்களில் தவிர மற்ற ஜில்லாக்களில் மட்டிலும் தொழிற் பள்ளிகள் இருக்கின்றதென்று மேஜையில் வைக்கப்பட்டுள்ள ஸ்டேட்மெண்டிலிருந்து தெரிகிறது. இந்த மூன்று ஜில்லாக்களிலும் உடனடியாக இந்த ஆண்டில் தொழிற்பள்ளிகளை ஆரம்பிக்க சர்க்காருக்கு உத்தேசம் உண்டா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : தென் ஆற்காடில் பாலிடெக்னிக் இருக்கிறது. வட ஆற்காட்டிலும் கன்னியாகுமரியிலும் பாலிடெக்னிக் இல்லை. இந்த இரண்டு ஜில்லாக்களிலும் அடுத்த வருஷம் தொழிற்பள்ளிகளை ஆரம்பிக்க முயற்சி செய்யப்பட்டு வருகிறது.

Village officers

*29 *Q.*—Sri C. MUTHIAH : கனம் ரெவினியு அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

கிராம உத்தியோகஸ்தர்களின் பதவிகளுக்கு சர்விஸ் கமிஷன் மூலம் நபர்களைத் தேர்ந்தெடுக்க உத்தேசமுண்டா ?

The Hon. Sri M. A. MANICKAVELU : No, Sir.

Sri C. MUTHIAH : இப்போது கிராம உத்தியோகஸ்தர்கள் இரு முறையில் நியமிக்கப்படுகிறார்கள். அவர்களை நியமிக்கும் விஷயத்தில் சர்க்கார் இரு கொள்கையை கையாள்கிறது. இசும் பாத்தியம், இசுமில்லாத பாத்தியம் என்ற இரு முறையில் அவர்கள் நியமிக்கப்படுகிறார்கள். அவர்களை சர்விஸ் கமிஷன் மூலம் நியமிக்க விட்டாலும், ஒரே முறையில் அவர்களை நியமிக்கும் வகையில் தங்கள் கொள்கையை மாற்றிக்கொள்ள அரசாங்கம் முன்வருமா ?

The Hon. Sri M A MANICKAVELU : சட்டப் பிரகாரம் இசும் பாத்தியம் இருக்கிறது. இந்தப் பிரச்னை ஒரு பெரிய பிரச்னை. இது அரசாங்கத்தின் ஆலோசனையில் இருக்கிறது.

Sri K. B S MANI : கிராம உத்தியோகஸ்தர்களை நியமிக்கும் விஷயத்தில் பரம்பரை பாத்தியதை முறை தஞ்சாவூர் ஜில்லாவில் இல்லை. அந்த முறை தென் ஆற்காடு ஜில்லாவில் இருக்கிறது. பல கொலைகளும், கொள்ளைகளும், கலவரங்களும் கிராமங்களில் நடப்பதற்கு பரம்பரை பாத்தியதை முறை ஏதுவாக இருக்கிறது. ஆகையால் இந்த முறையை நீக்குவதற்கு ஒரு அவசரச் சட்டத்தைக் கொண்டுவர அரசாங்கம் முன் வருமா ?

Sri A. GOVINDASAMY : I take strong objection to the words 'Kolai' and "Kollai" சில இடங்களில் இந்த முறையால் கொலை, கொள்ளைகள் நடக்கின்றன என்று கனம் அங்கத்தினர் சொல்கிறார்.

The Hon. Sri M. A MANICKAVELU : இதனால் கொலைகளும் கொள்ளைகளும் நடப்பதாக எனக்குத் தெரியவில்லை.